1993 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் வளர்ப்பைப் பொறுத்த மட்டிலே, இன்றைக்கு தமிழகத்திலே அவற்றை வளர்ப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. கடற்கரையோரங்களில்தான் இதை வளர்க்கக்கூடிய அளவுக்கு சாத்தியக்கூறுகள் இருப்பதால், கடற்கரை ஓரங்களிலுள்ள நிலங்கள் நமக்கு மிகவும் அவசியமானதாக இருக்கிற பட்சத்தில், இன்றைக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில்கூட, இறால் வளர்ப்பிலே அதிகமான அளவுக்கு ஈடுபட்டுக் கொண்டு, அதன் அடிப்படையிலே வளர்ந்து விட்ட அந்த 'டெக்னாலஜி'யைக் கொண்டு, இங்கு தமிழகத்திலேயும் செயல்படுவதற்கு, நமது தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உத்தர விட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே ஆசியாவிலே இல்லாத அளவுக்கு தர்வைகுளத்தில் முதலிலே 'அக்வா—கல்ச்சர்' எஸ்டேட் என்று சொல்லக்கூடிய இறால் வளர்ப்பு தொழிற்பேட்டை ஒன்றை நிறுவுவதற்கு உத்தரவிட்டு, பணிகளும் விரைவாக நடைபெற்று வருகிற சூழ்நிலையில், அதனை படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் இறால் வளர்ப்பு தொழிற்பேட்டைகள் அமைக்கக்கூடிய ஒரு பரிசீலனை, அரசினுடைய ஆய்விலே இருந்து வருகிறது. அந்த அடிப்படையிலே ஆதிதிராவிட மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத வகையிலே அங்கே அமைக்கப்படுகிற பண்ணைகளில் எல்லாம் மீனவர்கள், மீனவ கைம்பெண்கள், ஆதி திராவிடர்கள் மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. அறிக்கைகள்—அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழு அறிக்கைகளை அளித்தல், செல்வி எல். சுலோசனா, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 107—வது, 108—வது, 109—வது, 110—வது, 111—வது மற்றும் 112—வது வரையிலான் ஆறு அறிக்கைகயைப் பேரவைக்கு அளிக்கிறேன்.